## இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் - 2018

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று , காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ்ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமம் இலக்கம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் கையிருப்பில் தக்கவைத்துள்ள வைப்பிலிடப்படாத கிடைப்பனவுகள் ரூபா 525,555 ஆன பணத்தொகை மற்றும் பணத்திற்குச் சமனானவைகள் நிலுவையில் குறிப்பிடப்படாது தொழிற்படு மூலதனத்தில் ஏற்பட்டுள்ள மாற்றமாகக் காட்டப்பட்டுள்ளது. | பல்வேறு வழிகளில் பெறப்பட்ட ஆனால் 2018 திசெம்பர் 31 இல் வைப்பிலிடப்படாத பணம் மற்றும் காசோலைகளின் பெறுமதியானது இலகுவில் இனங்காணப்படக் கூடியவாறு நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வைப்பிலிடப்படாத பெறுவனவுகளாகக் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களை கணக்கிடும் போது அதன் கிரயத்தில் அல்லது தேறிய நிகரப் பெறுமதியில் உண்மையாக அளவிட முடியுமாக இருக்க வேண்டிய போதும், 4 ஒப்பந்தங்களின் பெறுமதியாகிய ரூபா 15,228,514 ஆனது பொறியியலாளரின் பரிந்துரையை மாத்திரம் | 4 முன்னேற்ற கட்டுமான ஒப்பந்தங்களுக்கான ஒதுக்கங்கள் 2018 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செயற்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதற்கான பணிகள் 2018 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டது. இதனால் அவற்றிற்குரிய நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அடிப்படையாகக் கொண்டே முதலாக்கம் செய்யப்பட்டுள்ளது. | பூர்த்தியாக்கப்படாதமையால் அக்குறிப்பிட்ட ஒப்பந்தங்களுக்காக மேலும் செலுத்தப்பட வேண்டிய தொகையானவை இனங்காணப்பட்டு பொறியியலாளரின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு முதலாக்கம் செய்யப்பட்டது. | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி திட்டங்கள் நடாத்துவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 8,158,986 ஆன தொகையில் செலவிடப்படாத எஞ்சிய தொகையான ரூபா 1,036,804 ஆனது குறிப்பிட்ட நிறுவனத்திற்கு மீளச் செலுத்தாமல் நடப்பாண்டின் கணக்குகளில் வருமானமாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட திணைக்களம் நீண்ட காலமாக இது தொடர்பாக விசாரணை செய்யாதபடியால் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள் நடாத்துவதற்காக 2015 இல் பெறப்பட்ட பணத்தில் எஞ்சிய தொகையானது கணக்குகளில் வருமானமாகக் கணக்கிடப்பட்டது. | குறிப்பிட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பணத்தில் மேலதிக தொகையை வருமானமாக எடுக்கப்படாமல் திருப்பிச் செலுத்துவதற்கான படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பட்டப்பின் படிப்புப் பிரிவு மற்றும் மொழிப் பிரிவிற்கு பெற வேண்டியதாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 12,195,650 ஆன தொகையானது முறையான அனுமதியின்றி கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. இதனால் மீளாய்வாண்டில் ஏற்பட்ட குறைபாடானது இவ் அளவினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட கற்கை நெறிக்கான பதிவுக் கட்டணத்தைப் பட்டப்பின் படிப்பு பிரிவு மற்றும் மொழிப் பிரிவிற்கு செலுத்திய பின்னர் கற்கை நெறிக்கான மிகுதிக் கட்டணம் முழுவதும் பல வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய வருமானமாகக் காட்டப்படுகின்றது. இருந்த போதிலும், இக்கற்கை நெறிகளுக்கு பதிவு செய்து குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு சமூகமளிக்காதோரின் | பெற வேண்டிய தொகை நீக்கப்படும் போது அது சம்பந்தமாக தேவையான அனுமதி பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெறுமதியை கணக்குகளிலிருந்து நீக்குவதற்கோ மற்றும் சீராக்கம் செய்வதற்கோ விசேட அனுமதி வேண்டப்படுவதில்லை என்பதுடன் ஆளுகை சபையால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. | |

**1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புபட்ட பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| நிலையான சொத்துக்களின் மொத்தக் கிரயம் | 779,612,380 | 786,743,302 | 7,130,922 | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிலையான சொத்துப் பதிவேடானது நாளதுவரையாக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் பதிவேடானது நாளதுவரையாக்கப்படல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் படி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பெறவேண்டிய நிலுவைகளின் பெறுமதி ரூபா 16,918,571 ஆக இருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | இந்நிலுவையை அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 1 தொடக்கம் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட செலுத்த வேண்டிய நிலுவைகளின் பெறுமதி ரூபா 38,310,438 ஆக இருந்ததுடன் 5 வருடங்களிற்கு மேற்பட்ட நிலுவை ரூபா 4,078,959 ஆக இருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | இந்நிலுவைகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.7 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1982 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தை நிறுவுவதற்கான சட்டத்தில் வரையாக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்குட்படாத மற்றும் நிறுவனத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உரித்தற்ற வினைத்திறன் காண் தடைப்பரீட்சைகள் 78 இணை மீளாய்வாண்டில் நடாத்தியதாக அவதானிக்கப்பட்டுள்ளது. | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் பரீட்சைகள் நடாத்துவது தொடர்பான 1982 இல் நியமிக்கப்பட்ட குழுவினரால் பரீட்சைகள் நடாத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கைகளுக்கு ஏற்ப சட்டத்தின் பிரமாணங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும். |

### 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) தாபனக் கோவை XV ஆம் அத்தியாயத்தின் 10.4 ஆம் பிரிவு மற்றும் 10.8 ஆம் பிரிவு | வெளிநாட்டுக்குச் செல்வதற்காக 10 நாட்களுக்கு முன்னர் அமைச்சரிடமிருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், இரு | எதிர்காலங்களில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் போது முறையான அனுமதியைப் பெறுவதற்கு | வெளிநாடுகளுக்கு செல்வதற்கு முன்பே குறிப்பிட்ட அனுமதி பெறப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அலுவலர்கள் வெளிநாட்டுப் பயணத்திற்கான அனுமதி வழங்கப்படாத நிலையில் அவர்கள் வெளிநாட்டுக்குப் பயணித்துள்ளனர். | உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) | 2015 மே 5 ஆந் திகதிய 01/2015/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | வெளிநாட்டு அரசு அல்லது நிதியுதவி அளிக்கும் நிறுவனத்தினால் தங்குவதற்கு மாத்திரம் வசதிகள் வழங்கும் சந்தர்ப்பத்தில் உணவு குடிபானங்களுக்காக இணைந்த கொடுப்பனவிலிருந்து நூற்றுக்கு 35 வீதத்தில் 1/3 பங்கை மட்டும் செலுத்த வேண்டும். எனினும், இதனுடன் இணங்காது நிறுவனத்தின் அலுவலர்கள் 11 பேருக்காகவும் ஏனைய நிறுவன அலுவலர்கள் 166 பேருக்குமாக ரூபா 4,115,324 ஆன தொகை (அ.டொலர் 23,788) மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அனுப்பப்பட்ட 2017 மார்ச் 17 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் வெளிநாட்டுப் பயணங்களின் போது இரவு உணவிற்காக இணைந்த கொடுப்பனவுகளில் நூற்றுக்கு 17 வீதத்தினை செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே இந்தக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டன. நிதி அமைச்சின் 02/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கையில் இணைந்த கொடுப்பனவுகளில் நூற்றுக்கு 35 வீதத்தில் 1/3 பங்கை செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கைகளின் பிரமாணங்களுக்கு ஏற்றவகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்கச் சுற்றிக்கை | இடைக்காலக் கட்டுநிதிக்கு உரிய பணிகள் நிறைவு செய்தவுடனே தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 19 சந்தர்ப்பங்களில் பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் செலவுகளுக்காகப் | எதிர்வரும் காலங்களில் உரிய பணிகள் நிறைவு செய்தவுடனேயே இடைக்காலக் கட்டுநிதிகள் தீர்க்கப்படுமென குறிப்பிடப்படுகிறது. | சுற்றறிக்கைப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 794,405 ஆன முற்பணத் தொகை தீர்க்கப்படும் போது 10 நாட்கள் தொடக்கம் 209 நாட்கள் வரையான கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக காணப்படுகின்றது. | | |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 56,743,886 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பான சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய பதிவேடொன்றைப் பேணுவதற்கோ அல்லது தொடுக்கப்பட்டுள்ள பதிவேட்டை நாளதுவரையாக்கப் படுவதற்கோ உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேட்டை நாளதுவரையாக்கப் படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.9 காசு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தினால் பேணப்பட்டு வரும் வங்கிக் கணக்ககுகள் 2 இணைப் பகுப்பாய்வு செய்தபோது ஏறக்குறைய ரூபா 5 மில்லியன் வருடந்தோறும் நாளாந்த அடிப்படையில் பேணப்பட்டு வருவதுடன் வருட இறுதியால் ரூபா 72,042,623 ஆன நிலுவையொன்று அவதானிக்கப்பட்டதுடன் பெரிய தொகைப் பணத்தை நடைமுறைக் கணக்குகளில் பேணுவதை விடவும் அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்வதால் வருமானம் உழைப்பதற்கான சந்தர்ப்பங்ள் உண்டு என்பதை விவேகமாக கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இப்பணமானது விரிவுரைக் கட்டணங்கள், மதியுரைக் கட்டணங்கள் மற்றும் பரீட்சைக் கட்டணங்கள் போன்ற நோக்கங்களுக்காப் பேணப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது. நிறுவகத்தின் ஆண்டிறுதியில் உள்ள நிலுவையில் செலவுகளை செய்ததன் பின்னர் ரூபா 40 மில்லியன் தொகையானது நிலையான வைப்புக்களில் 2019 சனவரியில் முதலீடு செய்யப்பட்டது. | பண நிலுவைகளைக் கையாளும் போது விவேகத்துடன் செயற்படல் வேண்டும். |

### 1.10 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உழைக்கும்போதே செலுத்தப்பட வேண்டிய வரியானது உழைத்த மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது யூன் தொடக்கம் திசெம்பர் வரையில் குறைக்கப்பட்டிருந்த ரூபா 596,023 ஆன தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | உழைக்கும்போதே செலுத்தப்படும் வரியானது அனுப்பி வைப்பதில் தாமதமேற்பட்டமையை ஏற்றுக் கொள்ளுகின்றோம். குறிப்பிட்ட வரிகளை அடுத்து வரும் மாதத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சேகரிக்கப்பட்ட வரிகளைக் காலதாமதமின்றிச் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 16,428,481 தொகையான பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 16,040,654 ஆக இருந்தது. இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 32,469,135 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மதியுரைச் சேவைக்கான வருமானத்தில் ஏற்பட்ட குறைவே இவ்வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் முன்னேற்ற பகுப்பாய்வு

2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் விரிவுரைக் கட்டண வருமானம் மற்றும் மதியுரைச் சேவைக் கட்டண வருமானம் என்பன முறையே நூற்றுக்கு 206 வீதத்திலிருந்து 307 வீதம் வரையாக குறைந்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2013 ஏப்ரல் 19 ஆந் திகதிய மற்றும் அமப/13/0237/523/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இரண்டாம் நிலைக் கல்வி ஊழியர்களுக்கு நூற்றுக்கு 50 வீதமான | | |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டாம் நிலைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. 2014 நவம்பர் 14 ஆந் திகதிய பொது வணிகச் செயற்குழுவின் கட்டளைக்கு ஏற்ப இக்கொடுப்பனவிற்காக மாதாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய குறைந்தபட்ச மணித்தயாலங்கள் அளவு 45 ஆகக் காட்டப்பட்டுள்ளது. இதற்கமைய பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | மாதாந்தம் 45 மணித்தியால வரையறையை எட்டாத விரிவுரையாளர்களின் குறைந்த மணித்தியாலங்களுக்காக கட்டணம் எதுவும் அறவிடப்படாமையால் நிறுவனத்திற்கு 2018 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களினுள் ரூபா 1,433,300 ஆன தொகை இழக்கப்பட்டிருந்தது. | 2015 ஏப்ரல் 24 ஆந் திகதிய ஆளுகை சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 2015 யூலை 1 ஆந் திகதியிலிருந்து அனைத்து விரிவுரையாளர்களும் மாதாந்தம் 45 மணித்தியால விரிவுரைகளை கட்டாயம் நிறைவு செய்ய வேண்டியது என்பதுடன் ஒரு குறிப்பிட்ட மாதமொன்றில் ஒரு விரிவுரையாளர் அவரது விரிவுரை மணித்தியாலங்களை நிறைவு செய்யாதவிடத்து அவர்களுடைய கட்டணம் அறவிடப்படுகின்ற கற்கை நெறிகளுக்கான விரிவுரை மணித்தியாலங்கள் அதற்காக உபயோகிக்கப்படும். | 2014 நவம்பர் 14 ஆந் திகதிய COPE தீர்மானத்தின் படி 45 மணித்தியாலங்கள் கட்டாயமென்பது (சம்பளம் கொடுக்கப்படுவதால்) வலியுறுத்தப்பட்டிருப்பதுடன் இதன் பிரகாரம் வேலை செய்யாதவிடத்து கட்டணம் பெறப்படும் கற்கை நெறிகளில் இருந்து இது அறவிடப்படுதல் வேண்டும். |
| (ii) | இலங்கை நிர்வாக சேவைக்கு 2017 ஆம் ஆண்டில் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 104 அலுவலர்களுக்கான சேவைத் தொடக்கப் பயிற்சி பாடநெறிக்கான செயற்பாட்டு மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது வெளிவாரி விரிவுரையாளர்களின்<br><br>விரிவுரை 2034 மணித்தியாலங்கள் மற்றும் உள்ளக விரிவுரையாளர்களின் விரிவுரை மணித்தியாலங்கள் 1,854 இனையும் உள்ளடக்கி மொத்த விரிவுரை மணித்தியாலங்கள் 3,888 இற்கான திட்டங்கள் | ஒரு வருடத்திற்குள் ஏறக்குறைய 100 அலுவலர்களைக் கொண்ட குழுக்களுக்கு சேவைத் தொடக்க பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. இதன் பிரகாரம் பல்வேறுபட்ட பயிற்சிப் பாடநெறிகள் ஒரே நேரத்தில் நடாத்தப்படும் போது திறனைக் கட்டியெழுப்பும்(CAPACITY DEVELOPMENT) பயிற்சி நெறியானது சேவையின் வேண்டுகோளுக்கிணங்க மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஏனைய | நிறுவகத்தின் உள்ளடபடியான மனித வளங்கள் உன்னத நிலையில் உள்ளக விரிவுரைகளுக்கு ஒதுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்தது. உள்ளக விரிவுரையாளர்களின் விரிவுரை மணித்தியாலங்கள் 1080 எனவே அது நூற்றுக்கு 58 சதவீதமான அளவுடையது மற்றும் வெளிவாரி விரிவுரையாளர்களின் விரிவுரை மணித்தியாலங்கள் 1650 ஆகும். அது நூற்றுக்கு 81 வீதமாகவும் பேணப்பட்டதன் காரணமாக பணிகளை நிறைவேற்றும் போது வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் உள்ளக விரிவுரையாளர்களின் பங்களிப்பு கீழ் மட்டத்தில் நிலவியதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. | பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கு உதவக்கூடிய மதியுரையாளர்கள் போதியளவு இல்லாமையாலும் தற்போது பீடங்களில் உள்ள அறிவுறுத்தல் அலுவலர்களின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளமையும் ஆகும். | |

### 3.2 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மூலதன மானியக் கணக்கு நிலுவையானது ரூபா 69,226,520 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 112,780,000 ஆன தொகை மூலதன மானியமாகப் பெறப்பட்டது. இத்தொகையில் ரூபா 116,630,536 ஆனது உபயோகிக்கப்பட்டதுடன் உபயோக்கப்படுத்தப்படாத மீதியான நிலுவைத் தொகை ரூபா 65,375,984 ஆனது 31 திசெம்பர் 2018 இல் நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளபடியான உபயோகிக்கப்படாத மூலதனக் கணக்கின் நிலுவையான ரூபா 65,375,984 ஆன தொகையை நிறுவகத்தின் முன்னேற்றங்களுக்குப் பாவிப்பதற்காக நிறுவனம் திட்டமிட்டிருந்தது. | மூலதன மானியங்கள் கையில் வைக்கப்பட்டிருந்து பின்னர் முதலீடு செய்யப்பட்டமை கடந்த கால நிதிக்கூற்றுக்களில் அவதானிக்கப் பட்டமையால் மூலதன மானியங்கள் முறையாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | நிலையான சொத்துக்களுக்காக உள்ளபடியாகப் பயன்படுத்தப்பட்ட தொகையை 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் | தோட்ட பராமரிப்பும் இயற்கைப்படுத்தலும் மற்றும் தளபாடக் கொள்வனவு என்பவற்றுக்கான | திட்டமிட்டபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| திட்டத்துடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 6 வீதம் தொடக்கம் 89 வீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டது. | விலைமனுக்களின் பெறுமதியானது மதிப்பீட்டினை விடக் குறைவாக இருந்தமையாலும் பழுதுபார்த்தலும் பராமரித்தலுக்குமான தேவைகள் ஏற்படாமையாலும் ஆகும். |

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| விரிவுரை மண்டபக்கட்டிடம் இல. 2-1 மற்றும் 1-1 கட்டுதலுடன் தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தியாக்கப்பட்டவுடன் ஒப்பந்தக்காரரால் இறுதிப் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய தொகையை பொறியியலாளர் சான்றுப்படுத்த வேண்டும். குறிப்பிட்ட சான்றுப்படுத்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்தப்படல் வேண்டும். இவ்விரண்டு விரிவுரை மண்டபங்கள் தொடர்பான உடன்படிக்கைகள் மேற்படி பிரமாணங்களுடன் இணங்காத விதத்தில் காணப்பட்டன. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் எழாமல் இருப்பதற்குரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காலம் 60 நாட்களாக இருந்த போதிலும், மேற்படி இவ்விரண்டு ஒப்பந்தங்களுக்கான ஒப்பந்தக்காரரும் குறிப்பிட்ட காலத்தினுள் திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்யத் தவறியுள்ளனர். | திருத்த வேலைகளின் போதான வேலைகளின் BOQ இல் உள்ளடக்கப்பட்ட “Provisional Sum” இன் கீழ் காட்டப்பட்ட வேலைக்கான பொருட்கள் மற்றும் விலைகள் சம்பந்தமாக இலங்கை | கட்டுமான வேலை ஒப்பந்த காலப்பகுதியினுள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பொறியியல் சேவைக் கூட்டுத்தாபனத்தின் பரிந்துரை பெறப்பட வேண்டியிருந்தமை. இந்நிறுவனத்தின் அலுவலர்களின் கடமைகள் அதிகமாக இருந்தபடியால் பரிந்துரை பெறப்படுவதற்கு காலதாமதம் ஏற்பட்டது. | |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணியினர் எண்ணிக்கையானது 31 திசெம்பரில் 165 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஆளணியினர் 109 என்பதுடன் 56 எண்ணிக்கையான வெற்றிடங்கள் காணப்பட்டன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் ஓடுவதற்குப் பாவிக்கப்பட்ட ஒரு வாகனத்தை பொறுப்பேற்பதற்கான மற்றும் பதிவு செய்வதற்குமான நடவடிக்கைகள் செயற்படுத்தப்படவில்லை. | பொது நிர்வாக அமைச்சிற்குச் சொந்தமான KY-4331 Nissam X-Trail ஜீப் ஒன்று நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின்அலுவலக வாகனமாக உபயோகிப்பதற்கு வழங்கப்பட்டது. அமைச்சின் உடன்பாட்டுடன் இவ்வாகனத்தைப் பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வாகனத்தின் உரிமையை நிறுவகத்தினால் பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை கணக்காய்வு தினம் வரையில் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை அச்சிடுவதற்காக கொடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரமாணங்களுக் கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவுக்கமைய வரைவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவகத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டமானது இதன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரமாணங்களுக்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திட்டமிடப்பட்ட செலவுகளை உள்ளபடியான செலவுகளுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 13 வீதம் தொடக்கம் 130 வீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டதுடன் வருமானத்திற்கான முரண்கள் நூற்றுக்கு 43 வீதம் தொடக்கம் 47 வீதமாக இருந்தது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளபடியான நிலைமை திட்டமிடப்பட்ட ஒதுக்கங்களுடன் இணங்கியதாக இருத்தல் வேண்டும். |